

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (15.10.2025) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், 5 வருடங்களில், 2000 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 3000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னை போரூரிலுள்ள ஹிட்டாச்சி குழுமத்தைச் சேர்ந்த ஹிட்டாச்சி எனர்ஜி டெக்னாலஜி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உலகளாவிய தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையத்தின் விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய், ஹிட்டாச்சி நிறுவனத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அலுவலர் திரு. ஆண்ட்ரியாஸ் ஷீரன்பெக், ஹிட்டாச்சி இந்தியா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வேணு நுகரி மற்றும் அந்நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் வடக்கு ஒன்றியம்,வள்ளியூர் பேரூர் தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வள்ளியூர் பி.ஆர். மகாலில் ஒன்றிய அவைத்தலைவர் சிவகாளியப்பன், பேரூர் அவைத் தலைவர் அன்பரசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார். இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் சித்திக்,நம்பி,அலெக்ஸ் அப்பாவு, ஜோசப் பெல்சி, போர்வெல் கணேசன், ராஜன், ஆரோக்கிய எட்வின், தொகுதி பார்வையாளர் சிவராஜ், மாரியப்பன், சேதுராமலிங்கம் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

### திராவிட மாடல் ஆட்சியினை மக்கள் போற்றிப் புகழ்ந்திடும் நிலையில்

# 2026-ல் மீண்டும் கழகத் தலைவரை அரியணை ஏற்றிட பாடுபடுவோம்!

## நெல்லை கிழக்கு மாவட்டம் - வள்ளியூர் வடக்கு ஒன்றியம் - வள்ளியூர் பேரூர்க் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை, அக்.17–

நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் வடக்கு ஒன்றியம், வள்ளியூர் பேரூர் தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வள்ளியூர் பி.ஆர்.மகாலில் ஒன்றிய அவைத்தலைவர் சிவகாளியப்பன், பேரூர் அவைத்தலைவர் அன்பரசு ஆகியோர் தலைமையில் வள்ளியூர் பேரூர் செயலாளர் சேதுராமலிங்கம், ஆதிபாண்டி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.வள்ளியூர் வடக்கு ஒன்றியப் பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை மாவட்ட துணை செயலாளர் நம்பி தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும்,

(BLA2) (BLC) பாகமுகவர்கள் குறித்தும், (SIR) வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் குறித்தும் விளக்கம் அளித்தும் எடுத்துரைத்தார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், இராதாபுரம் தொகுதி பார்வையாளர் சிவராஜ், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, போர்வல் கணேசன், ராஜன், ஆரோக்கிய எட்வின், பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன், மாவட்டஅணி அமைப்பாளர் இளைஞர் அணி ஜான் ரபீந்தர், விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி, பேரூராட்சி மன்ற தலைவர் இராதா ராதாகிருஷ்ணன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் தவசிராஜன், ராமசாமி, ஷேக்பீர் மைதீன், கோபி, சுரேஷ், தில்லை ராஜா, சுரேஷ் பாக்கியம், சிவா, ஐயப்பன், முத்துக்குமார், சேகர், மதிவாணன், அறங்காவலர் குழுத் தலைவர்கள் மீனா, அசோக்குமார், வழக்கறிஞர் சுப்பிரமணி, மாவட்ட பிரதிநிதி மாணிக்கம்,நயினார் ஐயாகுட்டி, முத்துராஜ், ஆதிபரமேஸ்வரன், சரவணன், கார்த்திக் சுபாஷ், ஆபிரகாம், மாடசாமி, மாணிக்கம், அருணாச் ச்சலம், தரணி சந்திரன் உள்பட ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2,) (BLC) (BDA) ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு.

கரூர் அரசியல் பரப்புரை கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களுக்கும் மற்றும் ஆ.திருமலாபுரம் ஊராட்சி கிளை செயலாளர் மதியழகன் அவர்கள் மறைவு, வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மாஹின் அவர்களின் தந்தையார் கழக நிர்வாகி அப்துல் சுக்கூர் அவர்கள் மறைவு, தெற்கு வள்ளியூர் ஊராட்சி முன்னாள் கிளை செயலாளர் முத்துராமலிங்கம் அவர்கள் மறைவு, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் லட்சுமணன் அவர்களின் தாயார் பொன்னம்மாள் அவர்கள் மறைவு, வள்ளியூர் 6 வது வார்டு செயலாளர் பெருமாள் அவர்களின் தாயார் இசக்கியம்மாள் அவர்கள் மறைவு, வள்ளியூர் 1 வது வார்டு முன்னாள் பொருளாளர் சொக்கையா தேவர் அவர்கள் மறைவு, வள்ளியூர் 6 வது வார்டு துணை செயலாளர் கணபதிதேவர் அவர்கள் மறைவு ஆகியோர்களது மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இராதாபுரம், நாங்குநேரி சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய நெல்லை கிழக்கு மாவட்டத்தை உருவாக்கி பொறுப்பாளராக டாக்டர் ம.கிரகாம் பெல் அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும்,கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், கழக முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு

ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது.

நெல்லை கிழக்கு மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளராக அலெக்ஸ் அப்பாவு அவர்களை நியமனம் செய்த கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மாவட்டப் பொறுப்பு அமைச்சரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கழக முதன்மை செயலாளர் கே.என்.நேரு, பரிந்துரை செய்த நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம் பெல் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்வது.

கழக தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்கள்,கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி ஆகியோர்களின் வழிகாட்டுதலின் படி தமிழ்நாடு முழுவதும் ஓரணியில் தமிழ்நாடு மூலம் ஒன்றரை கோடி குடும்பங்கள் கழகத்தில் உறுப்பினராக ஒரே குடும்பமாக இணைக்கப்பட்டுள்ளனர்.வள்ளியூர் வடக்கு ஒன்றிய பகுதியில் உறுப்பினர்கள் ஓரணியில் தமிழ்நாடு மூலம் சேர்ப்பதற்கு சிறப்பாக பணியாற்றிய கிளை கழகச் செயலாளர்கள் (BLA 2) (BDA) பாகமுகவர்கள் கழக முன்னோடிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் அனைவருக்கும் பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்வது.

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள 45 கிராம ஊராட்சிகளுக்கு ரூபாய் 605 கோடியிலும், பணகுடி, வள்ளியூர், திசையன்விளை பேரூராட்சிகளுக்கு ரூபாய் 423 கோடியிலும் அனைத்து வீடுகளுக்கும் தாமிரபரணி தண்ணீர் வழங்குவதற்கு புதிதாக தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 1028 கோடியினை அள்ளி தந்த முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேருவுக்கும், பரிந்துரை செய்து தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டத்தை பெற்று தந்த இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினரும் சட்டப்பேரவை தலைவருமான மு.அப்பாவு அவர்களுக்கும் வடக்கு ஒன்றிய தி.மு.க. நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி வள்ளியூர் வடக்கு ஒன்றியம் வள்ளியூர் பேரூராட்சி மற்றும் இப்பகுதியில் உள்ள ஊராட்சிகளில் வாழும் ஏழை, எளிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று வள்ளியூரில் ரூபாய் 31 கோடியில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையும், ரூபாய் 51 கோடியில் 504 அடுக்கு மாடி குடியிருப்பு கட்டிடமும், ரூபாய் 12.13 கோடியில் புதிதாக பேரறிஞர் அண்ணா பேருந்து நிலைய கட்டிடமும், ரூபாய் 4.69 கோடியில் கலைஞர் நூற்றாண்டு நினைவு தினசரி சந்தையும், வள்ளியூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் செயல்படுவதற்கு அரசாணையும், அடிப்படை கட்டமைப்புகள் உருவாக்க நிதியும் வழங்கி பல்வேறு ஆக்கப்பூர்வமான வளர்ச்சி திட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு அனுமதியும், நிதியும் வழங்கிய தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு அவர்களுக்கும் பரிந்துரை செய்து அனைத்து திட்டங்களையும் பெற்று தந்த இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்களுக்கும் வள்ளியூர் வடக்கு ஒன்றிய தி.மு.க நன்றியினையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் மகளிர் விடியல் பயணம் "கலைஞர் மகளிர் உரிமை திட்டம்" "இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48" "கலைஞர் கனவு இல்லம்" "மக்களை தேடி மருத்துவம்" "புதுமைப்பெண்" "தமிழ்புதல்வன் திட்டம்" "முதலமைச்சர் கிராம சாலை திட்டம்" "உங்கள் ஊரில் ஸ்டாலின்" அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு "காலை சிற்றுண்டி" கல்வியில் சிறந்த தமிழ்நாடு என போற்றும் வகையில் "நான் முதல்வன் திட்டம்" தாயுள்ளத்தோடு அனைத்து மக்கள் நலத்திட்டங்களையும் வழங்கி இந்தியாவுக்கே வழிகாட்டியாக திகழும் முதல மைச்சர் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் வள்ளியூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாராட்டுகளையும் நன்றியினையும் தெரிவித்துக் கொள்வது.

திராவிட மாடல் ஆட்சியின் நாயகன், நலத்திட்டங்களை வழங்கி தமிழ்நாட்டு மக்களால் போற்றி புகழ்ப்பட்டு வரும் நம் கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் 2026 இல் மீண்டும் முதலமைச்சர் பொறுப்பினை ஏற்றிட தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறும் வகையில் கழக மாவட்ட, ஒன்றிய, பேரூர், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், ஒன்றிய பிரதிநிதிகள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் அயராது உழைப்போம் என இக்கூட்டத்தில் உறுதி ஏற்போம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் 1,05,955 பேருக்கு

# ரூ.175 கோடியே 51 இலட்சம் போனஸ் - கருணைத் தொகை வழங்கல்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தகவல்!



சென்னை, அக் 17-

முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு, 2024-2025ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை 175 கோடியே 51 இலட்சம் ரூபாய், இன்று (15.10.2025) 1,05,955 பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவையை பெருமளவு பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காற்றி வருகின்றன. எட்டு அரசு போக்குவரத்து கழகங்களின் 20,912 பேருந்துகள், 10,125 க்கும் மேற்பட்ட வழித்தடங்கள் மூலம் குக்கிராமம் முதல் மாநகரங்கள், உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் தங்குதடையின்றி, போக்குவரத்து சேவை வழங்குவதன் மூலம் தினசரி 1.97 கோடி மக்கள் பயணிக்கின்றனர். இதில் 60% பயணிகள் கட்டணமில்லா அல்லது சலுகை கட்டணத்தில் பயணிக்கின்றனர். குறிப்பாக தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பங்களிப்பு இன்றியமையததாகும். இதனால் தமிழ்நாட்டின் பேருந்து வலையமைப்பு ஒரு முக்கியமான சமூக பாதுகாப்பு வலையமைப்பாக விளங்குகிறது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, போக்குவரத்து தொழிலாளர்களின் உழைப்பை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த 1,05,955 பணியாளர்களுக்கு, 2024 2025 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும் மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் கருணைத் தொகை 175 கோடியே 51 இலட்சம் ரூபாய் அவர்களின் வங்கி கணக்கில் இன்று (15.10.2025), வழங்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மேல்மலையனூர் ஒன்றியம் தேவனூர், கெங்கபுரம் ஊராட்சியில்

# ரூ.34.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதியரேஷன் கடைகள் - நாடக மேடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

செஞ்சி, அக். 17–

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் கெங்கபுரம் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 9.80லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கட்டிடமும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டிடம் மற்றும் சமத்தகுப்பம் கிராமத்தில் 8.50 லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் பகுதி நேர நியாய விலை கட்டிடம், தேவனூர் ஊராட்சியில் 8.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய நாடக மேடை கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர்கள் ராஜா ,சாந்தி சக்திவேல் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 34.30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடகமேடை, ரேஷன் கடை கட்டிடத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில்மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சாந்தி சுப்பிரமணியன், ஒன்றிய நிர்வாகிகள் மண்ண ஏழுமலை, சரவணன், செந்தில்குமார், வெங்கடேசன், அண்ணாமலை, நிர்மல்ராஜ்,

சக்திவாசன், ஆறுமுகம், ஊராட்சி நிர்வாகி கள்ஸ்ரீதர், தமிழ்வாணன், அண்ணாமலை, நெல்சன், நியூட்டன், அருண், வினோத், சேட்டு, கலாம், பெருமாள், தாஸ், வீரம்மாள், ராமு தேவனூர் ஊராட்சி நிர்வாகிகள் கார்த்திகேயன், ஆறுமுகம், கோபி, முனுசாமி, காளிதாஸ், ரவி, தமிழ்வாணன், தேவராஜ், பழனி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் மதுரை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அ.முத்தையன் அவர்கள் அலங்காநல்லூர் வடக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதால்;

மதுரை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ –வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் ஈரோடு வடக்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

அமைப்பாளர் - முனைவர் தா.கி.கிருபாகரன், 320, இந்திரா நகர், புஞ்சைதுறையம்பாளையம், கோபி, ஈரோடு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) க.சூரியபிரசாந்த், 6/18, அண்ணமார் கோவில் தெரு, தட்டாம்புதூர் குடியிருப்பு, கடத்தூர், சத்தி, ஈரோடு மாவட்டம். 2) கு.செந்தூர், 294, குருமந்தூரார் இல்லம், தாளவாடி, ஈரோடு மாவட்டம். 3) செ.சுதா, 193, கொண்டையம்பாளையம், வரப்பாளையம் அஞ்சல், நம்பியூர், ஈரோடு மாவட்டம். 4) வி.கே.சுகானந்தம், 5/70, ரைஸ் மில் வீதி, பா.வெள்ளாளபாளையம், கோபி, ஈரோடு மாவட்டம். 5) சே.முத்துகுமார், 266, செ.அம்மன் கோவில் தோட்டம், எண்ணமங்கலம், அந்தியூர், ஈரோடு மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15-10-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்
### அக்டோபர் 17 (2004)



இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**